புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# காலனிய எதிர்ப்பும் அடையாள உருவாக்கமும் : உடுப்பிட்டி ஆறுமுகப் பிள்ளையின் கண்டன நூல்கள்

தி.தமிழ்ச் செல்வன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம் – 624 302

ஆய்வுச்சுருக்கம்

19ஆம் நூற்றாண்டு தமிழ்ச் சமூக வரலாற்றில் காலனியம் ஏற்படுத்திய சமூகத் தாக்கங்கள் மிகுதியானவை. பண்பாட்டு நிலையில் சில முக்கியமான நவீனத்துவ நடவடிக்கைகளை காலனியம் உருவாக்கியிருந்தாலும் மறுநிலையில் பொருளாதாரம் மற்றும் சமய நடவடிக்கைகளில் நேர் எதிராக செயல்பட்டிருப்பதை அறிய முடிகிறது. காலனியத்தின் உடன் விளைவான கிறித்தவ சமயம் கல்வி நடவடிக்கைகளின் மூலமாக வேகமாகப் பரவியதோடு சில சமூகத் தளர்வுகளையும் உருவாக்கியது. இவ்வாறாக கிறித்தவ சமயத்தின் பண்பாட்டுப் பரவலாக்கத்தை உணர்ந்த சுதேச சமயத்தவர்கள் கிறித்தவத்தை எதிர்ப்பதன் மூலமாக தங்களது காலனிய எதிர்ப்பு மனநிலையை வெளிப்படுத்தினர் இப்பின்னணியில் சுதேச சமயத்தவர்கள் தங்களது சமயத்தை மறு கட்டமைப்பு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. தங்களது சமயத்தை மறு கட்டமைப்பு செய்த அதே வேளையில் கிறித்தவத்தை எதிர்ப்பதிலும் முனைப்பாகச் செயல்பட்டுள்ளனர். இவ்வாறான சமய எதிர்ப்பு மனநிலையின் முக்கிய வெளிப்பாடாக காலனிய காலத்தில் உருவான சமயங்களுக்கிடையிலான கண்டன நூல்களைக் காண முடிகின்றது. கிறித்தவத்துக்கு எதிரான கண்டன நூல் உருவாக்கம் யாழ்ப்பாணத்திலும் ததமிழகத்திலும்ஒருசேர நிகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது .இப்பின்னணியில் உடுப்பிட்டி ஆறுமுகம் பிள்ளை எழுதிய விவிலிய நூல் வரலாறு, கிறிஸ்து சமய பேதம் ஆகிய கண்டன நூல்களின் மூலமாக வெளிப்படும் காலனிய சமய எதிர்ப்பு மனநிலையையும் அடையாள உருவாக்கத்தையும் காணும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

தமிழில் இருசமயங்களுக்கிடையிலான மோதல்கள் என்பவை தொடர்ச்சியாக இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது அவை வாதம் தருக்கம் ஏசல் போன்ற வடிவங்களில் வெளிவந்துள்ளது.ஒரு சமயத்தவர் மாற்று சமயத்தாரோடு ஏதேனும் ஒருவகையில் ஊடாடியே வந்துள்ளனர் தமிழகத்தில் கி.பி 16ஆம் நூற்றாண்டில் கிறித்தவம் பரவத் தொடங்கிய காலங்களிலிருந்து கிறித்தவ சமயம் தொடர்புடைய நூல்கள் அச்சிடப்பட்டன கிறித்தவர்கள் தங்கள் சமயப் பிரச்சாரத்தின் காரணமாக சமயப் பிரச்சார நடவடிக்கையோடு சேர்த்து பிற சமயங்களை கண்டித்து நூல்கள் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது எனவே கிறித்தவர்கள் இங்குள்ள சமயங்களை கண்டித்து கண்டன நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர்.கிறித்தவர்களின் இதே நடைமுறையைப் பின்பற்றி சைவர்களும் கிறித்தவத்துக்கு எதிரான கண்டன நூல்களை எழுதினர்.யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பல சைவ அறிஞர்கள் பிற சமயங்களுக்கு எதிரான குறிப்பாக கிறித்துவத்துக்கு எதிரான கண்டன நூல்களை எழுதியுள்ளனர்.

*கண்டன நூல் உருவாக்கம்*

*பிற சமயங்களைக் கண்டித்து சைவர்கள் கண்டன நூல்களை எழுதியது போன்றே சைவசமயத்தை விளக்கி விளக்க நூல்களையும் எழுதினர்.இன்னும் சொல்லப்போனால் கிறித்தவ சமயத்திடமிருந்த நெருக்கடியே சைவர்களை இவ்வாறான விளக்க நூல்களையும் எழுத தூண்டியது எனலாம் இதனை சைவசமய சாரம் எனும் நூலை எழுதிய சு.சிவபாதசுந்தரம் பிள்ளையின் கீழ்காணும் கடிதப் பகுதி வழி அறிந்துகொள்ள முடிகிறது*

*“சைவ சமயத்தவர்கள் இதர சமயத்தவர்களாலே வஞ்சிக்கப்பட்டு சைவ சமயத்தை கை விடுதலைத் தவிர்க்க வேண்டுமென்பது எனது பேராசை சில வாரங்களின் முன் சேலம் ஜில்லாவில் மூன்று கிராமங்கள் முற்றாக கத்தோலிக்க மதத்துட் பிரவேசித்தனர் என்றும் வேறு மூன்று கிராமங்கள் பிரவேசிக்கும் என்றும் ஒரு பத்திரிகையிலே வாசித்தேன் சித்தியாரில் முதற்பாகம் பிற மத கண்டனம் அதற்கு அவ்வளவு முதன்மையுள்ளது நான் என் வாழ்நாளை கிறிஸ்து மத கண்டனத்துக்கு அர்ப்பணஞ் செய்திருந்தேன்.கிறிஸ்தவ மத கண்டன நூலொன்று விஸ்தாரமாய் எழுதுவதற்கு நான் தொடங்கியபோது சைவ நூல் ஒன்றாயினும் எழுதுவதற்கு முன் பிறமத கண்டன நூல் எழுதுவது பொருத்தமற்றது எனக் கண்டு சைவபோதம் முதல் புத்தகத்தை எழுதினேன் இப்படியே மற்றவைகளும் எழுதினேன் இவை என்னுடைய நேரத்தை கவர்ந்தமையால் நான் தொடக்கத்திலே எழுதுவதற்கு எண்ணியிருந்த கிறிஸ்து மத கண்டன நூல் எழுதப்படாமல் போயது”. (1947,ப. 9).*

*மேற்காணும் சு சிவபாதசுந்தரம் பிள்ளையின் கடிதப்பகுதி வழி சைவசமய விளக்க நூல்கள் தோன்றிய பின்புலத்தை அறிந்துகொள்ள முடிகிறது.*

*கிறித்தவர்கள் சைவ சமயத்தைக் கண்டித்து கண்டன நூல்களை எழுதியுள்ளனர். இவ்வாறு வெளியிடப்பட்ட கண்டன நூல்கள் எண்ணிக்கையில் அதிகப்படியாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன யாழ்ப்பாணச் சமயநிலை எனும் நூலில் ஆறுமுக நாவலர் “கிறிஸ்தவர்கள் சைவர்களையும் சைவசமயக் கடவுளர்களையும் வேத ஆகமங்களையும் பலவாறாக தூசித்தும் குருட்டு வழி மும்மூர்த்தி லட்சணம் போன்ற பல கண்டன நூல்களை பொருட்செலவு செய்து அச்சில் பதிப்பித்து ஊர்தோறும் கொடுப்பதற்காக உபதேசிமாரையும் நியமித்து விட்டுள்ளனர் அவைகளில் கொடுக்கப்படுவன சில அவையும் வாசிக்கப்படாமல் பட்டங்களும் சித்திர வேலைகள் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டன” (1872, ப.1 )*
*இவ்வாறாக கண்டன நூல்களின் உருவாக்கத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். கிறித்தவர்கள் சைவ சமயத்தைக் கண்டித்து கண்டன நூல்கள் எழுத சைவர்களும் கிறித்தவ சமயத்திற்கு எதிரான கண்டன நூல்களை எழுதியுள்ளனர் அவர்களில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சைவ அறிஞரான உடுப்பிட்டி ஆறுமுகம் பிள்ளை குறிப்பிடத்தகுந்தவர்.இவர் கிறித்து பல பிரிவினை,கிறிஸ்து சமய பேதம்,விவிலிய நூல் வரலாறு எனும் கண்டன நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் கிறிஸ்து சமய பேதம், விவிலிய நூல் வரலாறு எனும் இரண்டு நூல்களும் 1889 ஆம் ஆண்டு கிறிஸ்துமத கண்டன சபையாரால் யாழ்ப்பாணம் வித்யாநுபாலன யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது.*

*கிறித்தவப் பரவலும் சுதேச சமயங்களின் மீளெழுச்சியும்*

*தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் 19ஆம் நூற்றாண்டில் சாதி ,சமய ,மொழி அடிப்படையிலான பல அடையாள இயக்கங்கள் உருவாகி தங்களது அடையாள அரசியலை முன்னெடுத்தன. இத்தகைய போக்கில் இந்திய அளவில் உருவான அடையாள உருவாக்கங்களில் முதன்மையானது சுதேச சமயங்களின் மீள் எழுச்சியாகும் காலனியத்தின் வருகை மற்றும் கிறித்தவப் பரவல் ஆகிய பண்பாட்டு நடவடிக்கைகள் சுதேச சமயங்கள் மீளெழுச்சி பெறவும் காலனிய எதிர்ப்பில் ஈடுபடவும் காரணமாகின. இப்போக்கு இந்தியா முழுமையிலும் பரவி இருப்பதை அறிய முடிகின்றது. தங்கள் பகுதியில் பண்பாட்டு நிலையில் வேகமாகப் பரவிய கிறித்தவ சமயத்தை எதிர்த்து சுதேச சமயத்தவர்கள் வினை புரிந்துள்ளனர். காலனித்துவம் அறிமுகப்படுத்திய நவீன வசதிகளைக் கைக்கொண்டு கிறித்தவத்தை எதிர்க்கத் தலைப்பட்டனர் .இவ்வாறான நடவடிக்கைகளில் முக்கியமானது சமயக் கண்டன நூல்கள் உருவானவை ஆகும்.*

*அச்சுப் பண்பாட்டை பயன்படுத்தி கிறித்தவ சமயத்தை எதிர்க்கும் அடையாள அரசியலை அன்றைக்கு இந்திய அளவில் செயல்பட்ட பல சுதேச சமயத்தவர்களும் மேற்கொண்டுள்ளனர் .கேரளத்தில் சட்டம் பி சுவாமிகள் கிறித்தவ சமயத்தை கண்டித்து ஏராளமான கண்டன நூல்களை*

எழுதியுள்ளார் .வங்கத்தில் சீர்திருத்த மரபை மேற்கொண்ட ராஜாராம் மோகன் ராய் காலத்தில் கிறித்தவத்தைக் கண்டித்து கண்டன நூல்கள் உருவாகி உள்ளன. யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் இப்போக்கில் முனைப்புடன் செயல்பட்டுள்ளார். சைவ சமயத்தை மீட்டுருவாக்கம் செய்த அதே வேளையில் அன்றைக்கு நடைமுறையில் இருந்த கிறிஸ்தவ சமயத்தைக் கண்டித்து கண்டன நூல் எழுதும் மரபை நாவலரே தொடங்கி வைக்கிறார் .பின்னால் அவருடைய மாணவர்களால் இப்போக்கு வலுவாக முன்னெடுக்கப்பட்டது. இத்தன்மை குறித்து "நாவலர் கிருத்தவத்திற்கு எதிராக மட்டுமே தன்னை நிறுத்திக் கொண்டார் என்ற வாதத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை கூடுதலாக அல்லது அதற்கு இணையாக வேறொரு காரியத்தையும் அவர் செய்தார் யாழ்ப்பாண வட்டாரங்களில் வழக்கில் இருந்த வெகுசன சைவத்தை ஆகமச் சைவமாக மாற்றுவதில் அவர் பெரும் பங்காற்றினார்"(2011 : 141) எனக் கூறும் பேராசிரியர் நா முத்துமோகனின் கருத்து நாவலர் மேற்கொண்ட அடையாள அரசியலைப் புரிந்துகொள்ள உதவுகிறது. மேலும் இப்போக்கு குறித்து கூறும் பேராசிரியர் கா. சிவத்தம்பி "கிறித்தவத்தின் பரவலும் சைவத்தைப் பேணுதலும் தனித்தனி இலக்கிய முயற்சிகளாக தோன்றுகின்றன சைவ மதத்தினர் கிறித்தவத்தை எதிர்க்கும் இயக்கத்தின் வெளிப்பாடாக அமைந்த இலக்கியங்கள் அடுத்த காலப்பிரிவில் தோன்றுவது தர்க்க ரீதியான வளர்ச்சியே யாகும் " ( 1978 : 22) என்கிறார். இவ்வாறாக காலனிய எதிர்ப்பை வெளிப்படுத்த முனைந்தவர்கள் தங்களது சமய அடையாள உருவாக்கத்தை மேற்கொண்டுள்ளனர் . "இலங்கையில் காலனித்துவ ஒடுக்கு முறைக்கு எதிராக முதலில் நடந்த எதிர்ப்பு நடவடிக்கை சமய, பண்பாட்டு அடிப்படையிலானது .சுதேச பண்பாட்டை கட்டியமைத்ததில் சமயங்களில் பங்களிப்பை இது எடுத்துக்காட்டுகிறது புரட்டஸ்தாந்து கிறித்தவத்துக்கு எதிராக சுதேசிகள் தமது புரட்டஸ்தாந்து சமயங்களை முன்வைத்து சமய எதிர்ப்பரசியலை முன்னெடுத்தனர்" (2022 : 40) எனும் தி. செல்வமனோகரனின் கருத்து சுதேச சமயங்கள் மீளெழுச்சி பெற முனைந்ததை வலுவாக எடுத்துக்காட்டுகிறது. இப்பின்னணியிலேயே உடுப்பிட்டி ஆறுமுகம் பிள்ளையின் கண்டன நூல்களைக் காணவேண்டிஉள்ளது.

நூல் குறித்த தெளிவின்மை

யாழ்ப்பாணச் சிற்றிலக்கியப் புலவராக அறியப்படும் உடுப்பிட்டி ஆறுமுகப் பிள்ளை எழுதியதாகக் கருதப்படும் விவிலிய நூல் வரலாறு, கிறித்து பல பிரிவினை ஆகிய நூல்கள் குறித்தான முரண்பட்ட தகவலை மா.சு சம்பந்தன் குறிப்பிடுகிறார் அவர் " கிறிஸ்து பல பிரிவினை விவிலிய நூல் வரலாறு ஆறுமுக நாவலர் வேறு ஒருவர் பெயரில் எழுதியவை" (1997: ப.128) என்ற தகவலைத் தருகிறார். பொதுவாக கண்டன நூல்கள் புனைபெயரில் எழுதி வெளியிடும் மரபு இருந்துள்ளது காசிவாசி செந்திநாதையர் கிறிஸ்துமத கானனகுடாரி எனும் புனை பெயரில் சில கண்டன நூல்கள் எழுதியுள்ளார் அவ்வாறு உடுப்பிட்டி ஆறுமுகப்பிள்ளை பெயரில் இந்நூல்களை ஆறுமுக நாவலர் எழுதினாரா? இல்லை உடுப்பிட்டி ஆறுமுகப் பிள்ளையே இந்நூலை எழுதினாரா? எனும் குழப்பம் நிலவுகிறது. பாவலர் சரித்திர தீபகம் ஈழநாட்டு தமிழ்ப் புலவர் சரிதம் முதலிய புலவர் வரலாற்று நூல்களிலும் உடுப்பிட்டி ஆறுமுகப் பிள்ளை குறித்த தகவல்கள் காணக் கிடைக்கவில்லை.

விவிலிய நூல் வரலாறு

கிறித்தவ சமயத்தை எதிர்க்கும் கண்டன நூல்களில் முதன்மையான போக்கு என்பது அச்சமய நூலான விவிலியத்தை பல்வேறு வழிகளில் விமர்சிப்பதாக அமைகிறது. அவ்வகையில் காசிவாசி செந்திநாதையரின் விவிலிய குறிச்சிதம், விவிலிய குற்சித கண்டன திக்காரம் டி. ராமச்சந்திரராவின் விவிலிய நூலின் ஆசிரியர் யார் ? சி.வை.தாமோதரம் பிள்ளையின் விவிலிய விரோதம் ஆகிய கண்டன நூல்கள் விவிலியத்தை முதன்மைப்படுத்தி கண்டனம் செய்த நூல்களாகும். அவ்வகையில் உடுப்பிட்டி சி ஆறுமுகப் பிள்ளையால் எழுதப்பட்ட விவிலிய நூல் வரலாறு எனும் கிறித்தவ சமயத்தைக் கண்டித்து எழுதப்பட்ட கண்டன நூலில் கிறித்தவர்களின் புனித நூலான விவிலியத்தின் வரலாற்றினையும் அதிலுள்ள குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுகிறார். ஒரு சமயத்தைக் கண்டனம் செய்வதென்பது அவர்களின் நம்பிக்கைகள், கடவுளர்கள், புனித நூல்கள், சமய நம்பிக்கைகள் ஆகியவற்றை விமர்சிப்பதாக அமைகிறது.அந்த வகையில் கிறித்தவ சமயத்தின் புனித நூலான விவிலியத்தில் உள்ள குறைகளைச் சுட்டி

உடுப்பிட்டி ஆறுமுகப் பிள்ளை விவிலிய நூல் வரலாறு எனும் கண்டன நூலை உருவாக்கியுள்ளார். அந்நூலில் விவிலியத்திலுள்ள வரலாற்றுத் தெளிவின்மைகளையும், சிக்கல்களையும் கண்டனங்களாக பின்வருமாறு தொகுத்துக் கூறுகின்றார்.

1. ஆதி புத்தகம் மோசேவால் எழுதப்படவில்லை பலராலும் பல காலத்தில் எழுதப்பட்டது எனும் கருத்தை பிற அறிஞர்களின் கருத்தைக் கொண்டு மறுக்கிறார்

2. பழைய ஏற்பாட்டில் உள்ள பல புத்தகங்களும் பலரால் எழுதப்பட்டிருக்கிறது என்றும் அறிஞர்களிடையே கூட கருத்து வேறுபாடு இருப்பதையும் சுட்டிக்காட்டி இவற்றையெல்லாம் வேத சாஸ்திரம் என்பதிலும் சரித்திரங்களும் காண்க என்கிறார்.

3. பழைய ஏற்பாட்டில் உள்ள எழுபத்து மூன்று புத்தகங்களில் எல்லாவற்றையும் யூதர்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்றும் பண்டைக்கால கிறிஸ்தவர்கள் பல புத்தகங்களை ஏற்றுக் கொள்வதில்லை என்கிறார் கிறிஸ்தவர்கள் பொய்யென்று நீக்கிய ஐம்பத்து மூன்றாம் புத்தகத்தை கிரேக்க கிறிஸ்தவர்கள் மெய்யென்று விசுவாசிப்பது எதனால்? அங்கீகரிக்கப்பட்ட சில புத்தகங்களையும் புரோட்டஸ்டாண்டு கிறித்தவர் தங்கள் பைபிளில் சேர்க்காததற்கு காரணம் என்ன என்று கேட்கிறார்.

4. பழைய ஏற்பாட்டுப் பிரதியை கிறிஸ்தவர்கள் முழுமையாக அங்கீகரிக்காமல் யூதர்களும் புரோட்டஸ்டண்டு கிறிஸ்தவர்களும் சில பகுதிகளையே ஏற்றுக்கொள்வதாகவும் குறிப்பிடுகிறார்.

5. புதிய ஏற்பாட்டில் உள்ள அறுபது புத்தகங்களில் சிலவற்றை மட்டும் கத்தோலிக்கர்களும் புரோட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களும் ஏற்றுக்கொள்வதாகவும் சிலவற்றை நிராகரிப்பதாகவும் எடுத்துக்காட்டுகிறார் மேலும் மூலமொழியில் எழுதப்பட்ட புத்தகங்கள் பல காரணத்தினாலும் அழிந்துபோக பின்னால் வந்தவர்கள் அவர்களுடைய பெயரில் பொய் மெய் கலந்து எழுதி சேர்த்து விட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

6. கிறிஸ்து மத வரலாற்றில் சொல்லப்பட்ட பலவும் கிரேக்க எகிப்திய யூத இதிகாசங்களில் உள்ளதென்றும் எனவே கிறிஸ்து மத வரலாற்றை அறிந்துகொள்ள விழைபவர்கள் கிரேக்க யூத இதிகாசங்களை வாசிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

7. கிறிஸ்தவர்களின் விவிலியம் தேவவாக்கு அன்று என்றும் பலரால் பல காலத்தும் பொய் மெய் கலந்து எழுதப்பட்ட புத்தகம் என்றும் அப்புத்தகங்களில் உள்ளனவற்றிற்கு ஆதாரம் எகிப்திய இதிகாசங்களே என்றும் வாதிடுகிறார். இவ்வாறாக விவிலிய நூலின் மீதான கண்டனங்கள் கிறித்தவ சமய எதிர்ப்பாக வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

கிறிஸ்துசமய பேதம்

கிறிஸ்து சமய பேதம் எனும் கண்டன நூல் 1889 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது.விவிலிய நூல் வரலாறு எனும் நூலின் தொடர்ச்சியாக அதே ஆண்டில் இந்நூலும் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது சமயங்களுக்கிடையிலான கண்டன நூல்கள் குறுகியகால இடைவெளியில் உடனடியாக மறுப்பாக வெளிவந்து இருப்பதை அறியமுடிகிறது.எனவே இந்நூற்களுக்கான சமூகத் தேவையையும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. சமயக் கண்டன நூல்களுக்கென்று சில பொதுவான அமைப்பு முறைகள் காணப்படுகின்றன.முதலில் தன்னுடைய சமய வரலாற்றினையும் சமய நூல்கள் பற்றிய அறிமுகத்தையும் சுருக்கமாக விளக்கி பின்னர் பிற சமயங்களுக்கு எதிரான தூஷணங்களை முன்வைப்பதாக சமயக் கண்டன நூல்கள் அமைந்துள்ளன.

கிறிஸ்து சமய பேதம் எனும் நூல் இரு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது முதற்பகுதியில் வேதம் சிவாகமம் ஆகியவை குறித்து விளக்கப்பட்டுள்ளது.அவற்றுள்ளும் வேதத்திலும் பார்க்க சிவாகமமே சிறந்தது என்று விளக்கப்பட்டுள்ளது.தமிழில் உள்ள தேவார திருவாசகம் சைவசித்தாந்த சாத்திர நூல்கள் திருவாசகம் சிவாகமத்தின் கருத்தை சுருக்கி விளக்கும் சாத்திர நூல்களின் அறிமுகம் ஆகியவை முன்பகுதியில் தரப்பட்டுள்ளது.நூலின் இரண்டாம் பகுதியில் கிறிஸ்தவ சமயத்தில் உள்ள பல்வேறு நம்பிக்கைகளையும் பல்வேறு முரண்பட்ட கருத்துக்களையும் விளக்கி இறுதியில் சைவ சமயமே மேலான சமயம் என்றும் கிறித்துவ சமயத்தில் உண்மை என்பது மணத்துக்கும் இல்லை என்பன போன்ற கண்டனங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவாக கண்டன நூல்களில் எந்தச் சமயத்தைக் கண்டித்து நூல் எழுதுகிறார்களோ அந்தச் சமயத்தில் உள்ள புனித நூல்கள் மற்றும் சமய நூல்களில் உள்ள கருத்துக்களை சான்றாகக் காட்டி அச்சமயத்தின் மீதான கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.கிறிஸ்து சமய வேதத்தில்,கிறிஸ்து மதத்தில் உள்ள பல்வேறு முரண்பட்ட கருத்துக்களை எடுத்துக்கூறி கிறித்தவ சமயத்தின் மீதான விமர்சனங்கள் கண்டனங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

உடுப்பிட்டி ஆறுமுகப் பிள்ளையின் கிறிஸ்துசமய பேதம் எனும் கண்டன நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகளையும் விமர்சனங்களையும் தொகுத்துக் காண்பது அவசியமாகிறது.

1. ஒரு சமயத்தைப் பற்றி வாதம் செய்யும் முன்பு சமய நூல்களை அறிந்துகொள்ளுதல் அல்லது உணர்ந்தவர் வாய் கேட்டல் என்பது முக்கியமாகிறது கிறிஸ்தவர்கள் சைவசமய நூல்களை அறிந்து கொள்ளாமலேயே கண்டனங்களை முன்வைக்கிறார்கள் என்கின்றார்.

2. இயேசு தெய்வத் தன்மை உடையவரல்ல மனிதர் என்பார் ஒரு சாரார் இயேசுவுக்கு தெய்வத்தன்மை மனிதத்தன்மை இரண்டும் ஒன்றாய் விட்டன என்பார் ஒரு சாரார் இயேசுவுக்கு மனிதத் தன்மை தெய்வத்தன்மை இரண்டும் போய்விட்டன என்பார் ஒரு சாரார் என பல்வேறு கருத்துக்களை எடுத்துக்காட்டுகிறார்

3. கிறிஸ்துவின் பிறப்பும் இறப்பும் எடுத்துக் கூறப்பட்டு இயேசு சிலுவையில் அறையப்படவில்லை வேறொருவரே சிலுவையில் அறையப்பட்டார் என்பார்கள் என்கிறார்.

4. மைதானத்தில் போய் கூடிநின்று சாட்டையால் அடித்துக்கொண்டு வருத்தினால் தேவன் இறங்கி நமது பாவங்களை மன்னிப்பார் என்றும் மரியாள் வயிற்றில் பிறக்காமல் வேறொருவர் வயிற்றில் பிறந்து ஐம்பதாம் வயதில் இங்கு வந்தார் என்பார் சிலர் இயேசுவே தேவன் அல்ல என்பார் சிலர் என்கிறார்.

5. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு புத்தகங்கள் ஆதியாகமம் முதலிய ஐந்தும் சரித்திரங்களேயன்றி தேவவாக்கு அன்று என்பாரும் உளர் என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

6. அமெரிக்கா ஆப்பிரிக்கா இங்கிலாந்து முதலிய தேசத்திலுள்ள கத்தோலிக்கர்கள் புரோட்டஸ்டண்ட் எனும் சில பிரிவினர் இங்கு வந்து வசிப்பதாகவும் போர்ச்சுகீசியர்கள் சிவாலயம் முதலியவற்றை இடித்துத் தள்ளி கிறிஸ்துவ சமயத்தை பரப்பியதாகவும் குறிப்பிடுகிறார்.

7. அமெரிக்க ஐரோப்பிய கண்டங்களில் இருந்த கிறிஸ்து மத செல்வர்கள் சமயத்தைப் பரப்ப வேதனம் கொடுத்தனுப்ப இங்கு வந்த பாதிரிமார் பள்ளர் கடையர் முதலியவரையும் கல்வியறிவு சிறிதும் இல்லாத ஏழைகளையும் தம் மத படுகுழியில் வீழ்த்தி கத்தோலிக்க மார்க்கத்தை பரப்பினர் என்கிறார்.

8. கிறிஸ்து மத பிரிவுகளுக்கு உள்ளேயே பெருங்கலகம் விளைந்ததாகவும் பிழைக்க வந்த இடமாதலின் எம் ஊரில் தங்களுக்குள்ள விரோதத்தைக் காட்டாமல் இருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்.

இவ்வாறாக கிறிஸ்து சமயத்திலுள்ள பல்வேறு விமர்சனங்களையும் கண்டங்களாக வெளிப்படுத்தியுள்ளார். சைவ அறிஞர்கள் சைவ சமயக் கருத்துகளை மக்களிடம் சென்று சேர்ப்பதற்காக பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டனர் அவற்றுள் பிறசமயக் கண்டனங்கள் என்பவை சைவ தற்காப்பு நடவடிக்கையாக அவர்களால் மேற்கொள்ளப்பட்டதை அறிந்துகொள்ள முடிகிறது.

ஒரு சமயத்துக்கு எதிரான கண்டன நூல்கள் என்பவை சமய எதிர்ப்பு என்பனவற்றை மட்டுமே மையமாகக் கொள்ளாமல் சமூக வரலாற்றை அறிந்து கொள்வதற்கான தரவாகவும் அமைந்துள்ளன. சமயங்களுக்கு இடையில் உருவான கண்டன நூல்களை தொகுத்து நோக்கும்போது பத்தொண்பதாம் நூற்றாண்டு தமிழ்ச் சமூகத்தில் தொழிற்பட்ட சமயங்களில் பண்பாட்டு வரலாற்றினையும் சமயங்களுக்கிடையில் நிகழ்ந்த பண்பாட்டு மோதல்களையும் அறிந்து கொள்வதற்கு இவ்வாறான சமயக் கண்டன நூல்கள் பெரும் துணைபுரிகின்றன.

முடிவுரை

காலனிய சமய நடவடிக்கைகள் என்பவை அந்தந்த சுதேச சமயத்தவர்களிடம் பல்வேறு வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதை உணர்ந்த சுதேச சமயத்தவர்கள் கிறித்தவத்தின் பண்பாட்டு நடவடிக்கைகளை எதிர்த்து செயல்பட்டதோடு தங்களது சமயத்தை மீளெழுச்சி

செய்யவும் முயன்றுள்ளனர். இப்போக்கு இந்தியா முழுமையிலும் செயல்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இவ்வாறான காலனிய எதிர்ப்பு மனநிலை உருவான பின்னணியை விளங்கிக் கொள்வதற்கு முதன்மை ஆவணங்களாக இருப்பவை காலனிய காலத்தில் சமயங்களுக்கிடையே உருவான கண்டன நூல்களாகும் .இவ்வகையில் உடுப்பிட்டி ஆறுமுகம் பிள்ளையின் கண்டன நூல்கள் கிறித்தவ சமயத்தின் மீதான பல்வேறு கண்டனங்களை வெகுசனப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது .இவ்வாறான கண்டன நூல்களில் காலனிய எதிர்ப்பு மனநிலையை வெளிப்படுத்திய அதே வேளையில் சுதேச சமயங்களின் மீளெழுச்சியையும் புரிந்துகொள்ள முடிகிறது.

பயன்பட்ட நூல்கள்


1. ஆறுமுக நாவலர்.,யாழ்ப்பாணச் சமய நிலை, சைவவித்தியா விருத்திச்சங்க வெளியீடு, யாழ்ப்பாணம், 1937.

2. ஆறுமுகப் பிள்ளை. சி.,கிறிஸ்துமய பேதம் வித்யாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம் ,1889.

3. ஆறுமுகப் பிள்ளை. சி., விவிலிய நூல் வரலாறு, வித்தியாநுபாலன யந்திரசாலை, யாழ்ப்பாணம், 1889.

4. சம்பந்தன். மா. சு., அச்சும் பதிப்பும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

5.சிவபாதசுந்தரம். சு., சைவசமய சாரம், வித்தியாநுபாலன அச்சகம், சென்னை, 1956.

6. சிவத்தம்பி கார்த்திகேசு., ஈழத்தில் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

7. செல்வமனோகரன். தி., பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கையில் சுதேச சமயங்களின் நிலை : ஆறுமுகநாவலர் குணானந்த தேரரை அடிப்படையாகக் கொண்ட வாசிப்பு, மொழிதல் அரையாண்டு ஆய்விதழ், ஆடி – மார்கழி 2022 , ப. 24- 40.


********* ********* ********** ********* ********* ********** ********** **********